# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இறப்பர் கட்டுப்பாடு (திருத்தம்)

**இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்
அவர்களால் 2025 யூலை மாதம் 09 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2025 மே மாதம் 28 ஆம் திகதியன்று வர்த்தமானியில்
வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[26 ஆம் சட்டமூலம்]

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 29.00 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2:*** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது எந்த இடங்களிலெல்லாம் "கட்டுப்பாட்டாளர்" மற்றும் "இறப்பர் கட்டுப்பாட்டாளர்" என்னும் சொற்கள் காணப்படுகின்றனவோ அந்த இடங்களிலெல்லாம் "பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை மாற்றீடு செய்வதற்குமாகும்.

***வாசகம் 3:*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவினை நீக்குகின்ற தென்பதுடன் 4 ஆம் வாசகத்திற்கான விளைவாந்தன்மையான திருத்தம் ஒன்றாகும்.

***வாசகம் 4:*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் VI இலுள்ள "இறப்பர் கட்டுப்பாட்டு நிதியம் மற்றும் இறப்பர் மதியுரைச் சபை" என்னும் தலையங்கத்தை நீக்குகின்றது என்பதுடன் "இறப்பர் மதியுரைச் சபை" என்னும் புதிய தலையங்கத்தை உட்புகுத்துகின்றது.

***வாசகம் 5:*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 36, 37, 38, 39, 39அ மற்றும் 50 ஆகிய பிரிவுகளை நீக்குகின்றது என்பதுடன் 4 ஆம் வாசகத்திற்கான விளைவாந்தன்மையான திருத்தங்கள் ஆகின்றன.

***வாசகம் 6:*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது "கட்டுப்பாட்டாளர்" என்னும் சொல்லமைப்புக்கான உளதாம் வரைவிலக்கணத்தை நீக்குவதற்கும் அத்துடன் "பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொல்லமைப்புக்கான புதிய வரைவிலக்கணம் ஒன்றை உட்புகுத்துவதற்காகும்.

# இறப்பர் கட்டுப்பாடு (திருத்தம்)

ச.வ.-ஓ 31/2022

## இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக: -

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

436 ஆம் அத்தியாயத்திற்கான பொதுவான திருத்தம்

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் "கட்டுப்பாட்டாளர்" மற்றும் "இறப்பர் கட்டுப்பாட்டாளர்" என்னும் சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்தில் எந்தெந்த இடங்களிலெல்லாம் அத்தகைய சொற்கள் காணப்படுகின்றதோ அந்தந்த இடங்களிலெல்லாம் "பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

(2) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில் தொடர்பாடலில் படிவத்தில், வேறு சாதனத்தில் அல்லது ஆவணத்தில் 'கட்டுப்பாட்டாளர்" மற்றும் "இறப்பர்க் கட்டுப்பாட்டாளர்" என்பவற்றுக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் "இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு" செய்யப்பட்ட குறிப்பீடு ஒன்றாக வாசித்து பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவை நீக்குதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது.

PL 15359 - 280(2025/07)

முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் VI இலுள்ள தலையங்கத்தை மாற்றீடு செய்தல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் “பாகம் VI” இலுள்ள சொல்லையும் எண்களையும் உடனடுத்துக் காணப்படுகின்ற தலையங்கம் இத்தால் நீக்கப்படுகிறது என்பதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் தலையங்கம் இடப்படுகின்றது:-

“இறப்பர் மதியுரைச் சபை”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36, 37, 38, 39, 39அ மற்றும் 50 என்னும் பிரிவுகளை நீக்குதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36, 37, 38, 39, 39அ மற்றும் 50 ஆகிய பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவானது “கட்டுப்பாட்டாளர்” என்னும் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு இத்தால் திருத்தப்படுகின்றது என்பதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணம் இடப்படுகின்றது:-

““பணிப்பாளர் தலைமையதிபதி” என்பது இச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் அல்லது நியமிக்கப் பட்டிருப்பதாகக் கருதப்படும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;”.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**7.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.